செய்தி வெளியீடு எண்:748 நாள்:20.09.2021

**செய்தி வெளியீடு**

திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களைச் சார்ந்த பழைய மற்றும் புதிய பாசனப் பகுதிகளின் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தைச் சார்ந்த 10 அமராவதி பழைய வாய்க்கால்களின் (அலங்கியம் முதல் கரூர் வலது கரை வரை) பாசனப் பகுதிகளில் சம்பா சாகுபடிக்காக அமராவதி ஆற்று மதகு வழியாக 4536.00 மி.க.அடிக்கு மிகாமலும், திருப்பூர் மாவட்டத்திலுள்ள புதிய பாசன நிலங்களின் சம்பா சாகுபடிக்காக அமராவதி பிரதானக் கால்வாய் வழியாக 2661.00 மி.க.அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 7197.00 மி.க.அடிக்கு மிகாமல் 20.09.2021 முதல் 02.02.2022 வரை 135 நாட்களில் 70 நாட்கள் தண்ணீர் திறப்பு மற்றும் 65 நாட்கள் அடைப்பு என்ற அடிப்படையில், அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திருப்பூர் மாவட்டத்தில் 33,666 ஏக்கர் மற்றும் கரூர் மாவட்டத்தில் 13,451 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
பொதுப்பணித்துறை

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9